


# கோவை சிறைக்கு படையெடுக்கும் அட்மின் வெங்கட்!

போக்குவரத்து துறையின் தலைமை அலுவலக மான எழிலகத்தில் நிர்வாக அதிகாரியாக இருப்பவர் வெங்கட்ராமன். இவரது சர்விஸ் முழுக்க பெரும்பாலும் ஊட்டி என்றாலும், இவர் படித்ததும் வளர்ந்ததும் எல்லாமே ஊட்டிதான்.

'ஒட்டு' வீட்டில் வாழ்கையை தொடங்கிய வெங்கட் ராமன் ( இன்றும் அவர்களது தயார் அந்த வீட்டில் தான் வசிக்கிறாராம்) ஊட்டியிலே திருமணம் பண்ணி விட்டு, மேட்டுப்பாளையத்தில் சொந்தமாக வீடுகள் காம்ளக்ஸ் களை வாங்கி மேட்டுப்பாளையத்தில் செட்டில் ஆகி விட்டார்

தற்போது சென்னையில் போக்குவரத்து துறையின் நிர்வாக அதிகாரியாக இருக்கும் வெங்கட்ராமன் தலைமை அலுவலகமான எழிலகத்தில் நடக்கும் எந்த வொரு மூவ்மெண்ட்களையும் அமைச்சர் அலுவலக கவனத்திற்கு கொண்டு செல்லாமல், தான் தோன்றி தனமாக செயல்பட்டு வரு வது அமைச்சர் அலுவல கத்தில் உள்ள பலரையும் எரிச்சல் அடைய செய் துள்ளதோடு, அமைச்சர் மனதையும் மிகவும் நோக டித்துள்ளது.


நிர்மல்ராஜ்

மேலும் இவரது லஞ்ச பேரத்திற்கான காரியங்கள் எதுவாக இருந்தாலும் சரி, எந்த பேப்பர் மூவ்மெண்ட் ஆக இருந்தாலும், இதில் அமைச்சர் INTRESTED என்றும், மற்றொரு VIPயான அவரது பெயரையும் கோப்புகளுக்கு தக்க இடத்திற் கேற்றவாறு ஆணையரிடத்தில் கூட்டியோ, குறைத்தோ பேசி காரியங்களை முடித்து 'கல்லா' கட்டுவதில் கில்லாடியான இவர், தனக்கு விருப்பமில்லா கோப்பு களை நகர்த்துவதற்கு நாட்களை கடத்துவதும், சாமியே வரம் கொடுத்து (ஆணையர்) பூசாரி தடுப்பதை (அட்மின்)போல ஆணையரின் கவனத்திற்கு தேவை யில்லா குழப்பங்களை ஏற்படுத்தி, கோப்புகளை தேக்கப் படுத்துவதும், மற்றும் அந்த கோப்புகளை அப்புறப் படுத்துவதிலும் கை தேர்ந்த அட்மின்-க்கு 'காப்புகள்' கையில் ஏறும் போது தான் செய்த பாவங்களை உணர்வார் என்றே சக அதிகாரிகளே பேசி வருவது வியப்பைத்தான் ஏற்படுத்துகிறது.

ஊட்டியில் ஒரு 'ஒட்டு' வீட்டில் மிக சிரமமான வாழ்க்கையை மேற்கொண்ட வெங்கட்ராமனுக்கு போக்குவரத்து துறையில் ஆய்வாளராக பணி கிடைத்த தும், அவரது வளர்ச்சி அசுரவேகத்தில் இருந்தாலும், JTC யாக பதவி உயர்வு பெற்ற பின் மேலும் அவரது லஞ்ச வருமானங்கள் எகிறியது. அதோடு தலைமை அலுவலக JTC ஆனதுதான், ராக்கெட் – வேகத்தையே மிஞ்சும் அளவுக்கு, இவரது, லஞ்ச கட்டிங்குகள் எகிறி எகிறி குதித்தது.


அட்மின் வெங்கட்

தற்போது, இவரது ஊரில், அவரால் முதலீடு செய்யப்பட்ட மினி பேருந்துகள் மற்றும் சரக்கு வாகனங்கள் போன்ற பல தொழில்களை பினாமி பெயரில் மேற்கொண்டு வந்ததை எல்லாம், பினாமி யாளர்களே சூறையாடிக் கொண்டு JTC அட்மினுக்கு பெப்பே காட்டியதோடு அவருக்கு தலையில் துண்டைப் போட்டு அனுப்பி விட்டனர். அப்படி இருந்தும் அசராத JTC எழிலக நிர்வாகத்தை கையில் எடுத்து, பணியிட மாற்றங்கள் மற்றும் தண்டனைக்குரிய, குற்ற கோப்புகளை நீர்த்து போக செய்தல், பதவி உயர்வுகளை வழங்குவதற்கான கோப்புகளை தயார் செய்தல், போன்ற பல்வேறு பணிகளுக்கான உத்தரவுகளை வழங்குவதற்கான பணிகளுக்குரிய அனைத்திலும் (அட்மின் செயலுக்கு ஒரு உதாரணமாக பூங்குழலி பதவி உயர்வில் நடந்த ஊழல் முறையின் தொகுப்பினை அடுத்தடுத்து பார்ப்போம்), சட்டத்தின் ஒட்டைகளை அறிந்து முறைகேடுகளை செய்து, பல கோடிகளுக்கு அதிபதியான இவர் மீது தற்போது சென்னை லஞ்ச ஒழிப்பின் இயக்குனர் அலுவலகத்தின் பார்வை விழுந்துள்ளதால் இங்கிருந்து பொட்டியை கட்ட தயாராகி விட்டார் அட்மின். அதே நேரத்தில் ஆசை யாரை விட்டது என்பது போல, தற்போது கோவை மண்டல இணை போக்குவரத்து ஆணையர் பதவியிடம் காலியாக உள்ளதால் அங்கு பணிக்கு செல்ல ஆயுத்தமாகிவிட்டார் வெங்கட்.

இன்னும் ஒரு வார காலத்தில் பதவி ஏற்க உள்ள அவருக்கு, அந்த பகுதியில் இருந்து 37 லட்சம் மாத வருமானமாக வர வேண்டும் என்ற கட்டளைகளோடு கோவையை நோக்கி பயணமாகும் இவருக்கு, கோவை யின் விஜிலென்ஸ் அலுவலக கதவுகள் திறந்தே வைக்கப்பட்டிருப்பதை நினைத்து அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை என்கின்றனர் விபரமானவர்கள்.

என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389

12-09-2022